# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 6663/D/2025**

திரு K.வெள்ளத்துரை .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 02.12.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 03.03.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 24.04.2025 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு K.வெள்ளத்துரை ஆஜராகவில்லை. மனுதாரர் இவ்வாணையத்திற்கு 01.07.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக வயது முதிர்வு / இதய நோய்களுக்கு வைத்தியம் செய்து வருவதால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், இவ்வழக்கின் சம்பந்தமாக பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து தகவல்களை தனித்தனியாக பெற்றுத்தருமாறும், தவறான தகவல் அளித்துள்ள பொதுத்தகவல் அலுவலர் மீது உரிய விசாரணையும், உரிய நஷ்டஈடும் பெற்றுத்தருமாறும் ஆணையத்தைக் கோரியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொதுத் தகவல் அலுவலர். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்

அவர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான பணிகள் நடைபெற்று வருவதால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர். திருமதி சு.சிவகாமிசுந்தரி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்)(பொ), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 02.12.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், வீட்டின் முன்புறம் உள்ள வேப்ப மரத்தினை அகற்றி தருவது தொடர்பாக 01.07.2024, 05.08.2024 மற்றும் 04.11.2024 ஆகிய தேதியிட்டு அளித்த 3 மனுக்களை பெற்றுக்கொண்ட அலுவலர் பெயர் மற்றும் முகவரி விவரம், மேற்கூறிய 3 மனுக்களை எந்த அலுவலருக்கு எந்த தேதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தொடர்பான 5 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 03.03.2025 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 24.04.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 06.01.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு 06.01.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களாக இல்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, ஆணையம், பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***இன்றைய விசாரணையின் அழைப்பாணையினை பெற்ற பிறகும் பொதுத் தகவல் அலுவலர் விசாரணையில் ஆஜராகாமல் தனக்கு நிகரான பணியில் உள்ள அலுவலரை அனுப்பாமல், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்களை அனுப்பிய திருமதி த.அனிதா, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.***
- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த, திரு இரா.காசி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின்***

*நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 6663/D/2025**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.

**மனுதாரர்**

திரு கி.வெள்ளத்துரை,
த/பெ. திரு ச.கிருஷ்ணன்,
க.எண்.3/93, இளங்கோ அடிகள் தெரு,
அகஸ்தியர்பட்டி,
அம்பாசமுத்திரம் தாலுக்கா,
திருநெல்வேலி மாவட்டம் - 627 428.

***Copy to: File***
***VP / PA***